According to rule 34 of the Tamil Nadu Legislative Assembly Rules a Department should furnish the answer to a question within 15 days from the date of its receipt and the Speaker can grant an extension of time to a reasonable period for furnishing an answer on the request of the Department. But, so far, such requests have been received only in respect of 4 questions.

I have therefore ordered my Department to include 10 questions in the order in which they were communicated to the Departments of the Secretariat, in the Order Paper for each day from 23rd June 1971, whether answers are received or not. I therefore request the Hon. Ministers to issue necessary instructions to the Departments concerned for the speedy despatch of answers.

3. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

அரிசனங்களுக்கு வீட்டு வசதி.

***1 வினா.—திரு. கே. என். குமாரசாமி :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரிசனங்களுக்கு வீடு கட்ட அரசாங்கம் மானியம் ஏதேனும் வழங்க தற்போது உத்தேசித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், எவ்வளவு ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) அரிசனங்களுக்கு வீடு கட்ட அரசு மானியம் வழங்கும் திட்டம் நடைமுறையிலேயே உள்ளது.

(இ) இத்திட்டத்தின் கீழ் ஒரு வீடு கட்டிக் கொடுப்பதற்கான செலவு ரூ. 940 ஆகும். இத்தொகையில் ரூ. 250 கடனாகக் கருதப்படுகிறது. மீதமுள்ள தொகை மானியமாகக் கொடுக்கப்படுகிறது.

திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, அரிசனங்களுக்கு வீடுகள் கட்டுகிற திட்டத்தின் கீழ் பல இடங்களில் அதிகமாக இடம் ஒதுக்கப்பட்டிருந்தாலும், பணமில்லாத காரணத்தினால் பல இடங்களில் அவர்கள் வீடு கட்டாமலேயே திண்டாடிக்கொண்டு இருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ? வீடுகள் கட்டுவதற்கு எந்த எந்த வகையில் அவர்களுக்கு உதவி செய்ய அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஏற்கனவே பல ஆயிரக்கணக்கான மனைக்கட்டுகள் அரிசனங்களுக்குக் கொடுக்கப்பட்டு அவர்கள் வீடு கட்ட முடியாமல் இருப்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறது. மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடு கட்டிக்கொடுப்பதற்காக இந்தத் திட்டத்தை அரசு அமுல்படுத்திவருகிறது. மேலும் கடன் கொடுத்தால் திருப்பித்தர வசதியுள்ளவர்களுக்கு மூவாயிரம் ரூபாய் வரையிலும் கடனாக வீடு கட்டிக்கொள்ள உதவி செய்யும் திட்டமும் இருக்கிறது. இப்படி அரசு எல்லாவகையிலும் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது.

டாக்டர் எச். வி. ஹாண்டே : அமைச்சர் அவர்கள் தம் பதிலில் ஒரு வீட்டுக்கு எவ்வளவு பணம் கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். சென்ற இரண்டு ஆண்டுகளாக இந்தத் திட்டத்தின் கீழ் எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது ? எவ்வளவு வீடுகள் கட்டப்பட்டு இருக்கின்றன ? எவ்வளவு மனுக்கள் வந்திருக்கின்றன. வந்த மனுக்கள் —கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள் இவற்றின் ரேஷியோ என்ன என்று சொல்லமுடியுமா ?

1971 ஜூன் 19]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : 1964ஆம் ஆண்டு இந்த ஆயிரம் ரூபாய் வீடு கட்டித்தரும் திட்டத்தை மத்திய அரசாங்கம் நிறுத்திவைத்து விட்டது. காரணம் அந்த வீடுகள் சரியான முறையில் கட்டப்படவில்லை என்பதாகும். ஒப்பந்தக்காரர்கள் ஆயிரம் ரூபாய் வீடு என்கிற பொழுது எழுநூறு, எண்ணூறு ரூபாயில் கட்டிவிட்டு, நல்ல முறையில் கட்டவில்லை என்கிற புகாருக்கு இடமளித்துவிட்டார்கள். மீண்டும் 1967க்குப்பிறகு அரசாங்கம் ரூ. 960-க்கு நலத்துறை மூலமாகவே இந்த வீடுகளைக் கட்டிக்கொடுப்பது என்கிற முறையில் இந்தத் திட்டத்தைச் செயல் படுத்தத் தொடங்கினார்கள்.

இன்னும் கடன் திருப்பித் தரக் கூடியவர்களுக்கு மூவாயிரம் வரை கடன் உதவி வீடு கட்டிக்கொள்ள அளிக்கும் திட்டம் ஒன்றை மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். அதைப் பற்றியும் இன்னும் அவர்கள் பதில் தரவில்லை. மத்திய அரசாங்கத்தின் முடிவு இதுபற்றி இன்னது என்று தெரிவிக்கப்படாதிருக்கிற காரணத்தினால் ரூ. 940-க்கு வீடு கட்டும் இந்தத் திட்டத்திற்கு சென்ற ஆண்டு 4.12 லட்சம் ஒதுக்கி செயல்பட்டிருக்கிறோம். கடந்த ஆண்டிலும் அதே தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திருமதி வி. ப. பழனியம்மாள்: தலைவர் அவர்களே, இந்த வீடு கட்டும் திட்டம் எந்த எந்த இடங்களில் அமுல் நடத்தப்படுகிறது எவ்வளவு வீடுகள் கட்டிக்கொடுக்கப்படுகின்றன ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : எல்லா இடங்களிலும் கட்டப்பட்டு வருகின்றன. ஆண்டுக்கு 560, 540 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில் கூட நிறைவேற்றப்பட்ட குடியிருப்புக் காலனித் திட்டத்தைத் திறந்து வைத்திருக்கிறேன். அவர்கள் மறந்துவிட்டாலும் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: இப்போது அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் முறையில் போனால் 60 ஆண்டுகள் ஆனாலும் கூட இந்தத் திட்டம் வெற்றிகரமாக முடியாது. இந்த முறையில் ஒரு பஞ்சாயத்து யூனியன் என்றால் அதில் ஒரு கிராமத்தில் 6 வீடுகள் கட்டிக்கொடுக்கப் படுகின்றன. ஆகவே ஒவ்வொரு யூனியனிலும் வீடு கட்டும் அரிசன கூட்டுறவு சங்கம் அமைத்து மானியமாகவும், கடனாகவும் வீடு கட்டப் பணம் கொடுத்து 30 ஆண்டுகளில் திரும்பப் பெறக்கூடியமுறையில் விரிவான முயற்சிகளை அரசாங்கம் மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கூட்டுறவுத் துறையின் மூலமும் வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் அந்தத் துறையில் பரிசீலனையில் இருக்கிறது.

வீட்டு வாரியத்தின் மூலம் கட்டப்படுகிற வீடுகளில் 10 சதவிகிதம் அரிசனங்களுக்கும் கட்டித்தரவேண்டும் என்கிற திட்டமும் இருக்கிறது.

நலத்துறை மூலம் நான் ஏற்கனவே சொன்னதுபோல கடனைத்திருப்பித் தர வசதியுள்ளவர்களுக்கு வீடு கட்டிக்கொள்ள மூவாயிரம் வரை கடன் அளிக்கும் திட்டமும் பரிசீலனையில் இருக்கிறது. நலத்துறையே 940 வீடுகளைக் கட்டிக் கொடுத்துக்கொண்டும் வருகிறது. ஆக, அரிசனங்களுக்கு வீடுகட்டித்தரும் முயற்சியில் இந்த அரசு பல்வகையிலும் தீவிர கவனம் செலுத்திவருகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. சௌந்திரபாண்டியன்: தலைவர்அவர்களே, தற்போது 960 ரூபாய் அளவில் கட்டப்படும் வீடுகள் ஒரே ஒரு அறை கொண்டதாக இருக்கிறது. சமைப்பது, படுப்பது போன்ற எல்லா காரியங்களும் அதிலே நடைபெற்றாக வேண்டிய காரணத்தாலே, வேறொரு மாதிரியான வீடு கட்டி, கூட ஒரு சமையல் அறையும் கட்டித் தர அரசாங்கம் மறு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : நானே அந்த வீடுகளைப் பார்த்து, அவை சரியாக இல்லையென்பதைக் கூறி, ஒரு சிறு திருத்தத்தையும் கொடுத்திருக்கிறேன். அந்த வகையில் பின்பக்கத்தில் ஒரு சமையல் அறையும், முன்பக்கத்தில் கூடுதலாக ஒரு அறையும் கொண்டதாக இருக்க வேண்டுமென்று தெரிவித்திருக்கிறேன். கூட 100, 200 ரூபாய் செலவானாலும் பரவாயில்லை என்று தெரிவித்துள்ளேன். ஆகவே, இப்போதுள்ள திட்டத்தை மாற்றியமைக்குமாறு கூறியிருக்கிறேன். இனிமேல் கட்டப்படும் வீடுகள் இந்தமாதிரியான வசதிகளோடு கட்டப்படும்.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, அரசாங்கம் அரிசனங்களுக்காகக் கட்டிக்கொடுக்கப்படும் வீடுகளுக்கான கடன் தொகையில் இன்னும் 100, 200 ரூபாய் திருப்பிச் செலுத்தப்படாமல் பாக்கியிருக்கிறது. அப்படி இருக்கிற மக்களுக்கு அந்தத் தொகையை அரசாங்கம் தள்ளுபடி செய்துவிடுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, இது ஒரு நல்ல கேள்வி. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிந்தவரையில், அவருடைய பகுதியில் 100, 200 ரூபாய் கட்டாதவர்கள் இருக்கலாம். ஆனால் பெரும்பாலான இடங்களில் கடன் திரும்பிவருவதில்லை. "எங்களால் கட்ட முடியவில்லை. அதை ரத்து செய்துவிடுங்கள்" என்கிற கோரிக்கை வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரைப் போன்று மற்ற உறுப்பினர்களும் முயற்சி எடுத்துக்கொண்டால், கடன் தொகை எளிதில் வசூலாகும். அதன் காரணமாக நல்ல பல திட்டங்களை எடுத்துக்கொள்ளமுடியும்.

Thiru K. S. KOTHANDARAMIAH : The construction of houses for Harijans is long pending and it is an important matter. At present it is entrusted to panchayats and panchayat Union Councils. But they do not evince interest in this important matter. It has become a cry by the Harijans in the wilderness. On this score, will the Hon. Minister for Harijan Welfare entrust the construction work to other agencies or to District Harijan Welfare Committees under the control of Collector ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, நான் ஆரம்பத்திலே சொன்னேன். இப்போது நலத்துறையின் மூலமாகத் தான் பொறுப்பேற்று வீடுகளைக் கட்டித் தருகிறோம். முனிசிபாலிடிகள், பஞ்சாயத்துக்கள் மூலமாக வீடுகள் கட்டித் தரப்படவில்லை. நகரசுத்தி தொழிலாளர்களுக்கு முனிசிபாலிடிகளே வீடுகள் கட்டித் தருகின்ற முறை இருக்கிறது. அதையும் நலத்துறை மூலமாக கட்டலாமா என்பதையும் யோசனை செய்துகொண்டிருக்கிறோம். நலத்துறையின் மூலமாகத்தான் இப்போது வீடுகள் கட்டிக்கொடுக்கப்படுகின்றன.

Thiru K. M. SUBRAMANIAM : May I know whether this, Rs. 250 given as grant to Harijans excludes the other grants that are likely to be given to them and that ought to be given to them, as grant for other slum dwellers belonging to other communities ? Is this Rs. 250 *plus* any other grant that would be given to other communities would accrue to Harijan community also ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, இதுவரையில் எனது இலாகாவின் மூலமாக அரிசனங்களுக்குத் தான் வீடு கட்டும் திட்டம் இருக்கிறது. அவர்களுக்குக் கட்டிக் கொடுத்துக் கொண்டு வருகிறோம். அரிசனங்கள் அல்லாத பொற்கொல்லர்கள், கைத்தறி நெசவாளர்கள் போன்ற பின்னிலை வகுப்பினருக்கு வீடுகள் கட்டிக்

கொடுக்கும் திட்டம் வேறு துறையின் மூலமாக நடத்தப்படுகின்றது. அரிசனங்களுக்கு என்று ஒரு திட்டம், மற்றவர்களுக்கு வேறு திட்டம். அரிசனங்களுக்கு வீடு கட்டும் திட்டத்தின் கீழ் வீடு கட்ட ஆகும் செலவு 940 ரூபாய். அதில் 250 ரூபாய் கடன்.

THIRU M. A. LATHEEF : The cost of construction of Houses to the Harijans differs in plains and in hilly areas. The grant that is given to the people living in the plains is obviously lesser than the cost in hilly areas. Will the Government consider the request that grant given to the people living in hilly areas be increased ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மலைப் பகுதிகளில் வாழ்பவர்களுக்கு 1,200 ரூபாய் வரையில் வீடு கட்ட கொடுக்கப்படுகிறது.

திரு. நா. காசிராமன் : தலைவரவர்களே, நமக்கு சமீப காலங்களில் ஏற்பட்ட அனுபவத்தைக் கொண்டு பார்க்கும் போது, அரிசனங்களுக்கு நெருப்பு பிடிக்காத வீடுகளைக் கட்டிக் கொடுப்பது நலம். இப்படி தீப் பிடிக்காத வீடுகள் கட்டித் தருவதற்கு இப்போது வீடு ஒன்றுக்கு தரப்படும் 940 ரூபாய் போதும் என்று அரசாங்கம் கருதுகிறதா ? அல்லது இப்போதுள்ள திட்டத்தை மாற்றியமைக்க அரசு தயாராக இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, சென்னையில் சில ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக எரிக்கப்பட்ட வீடுகளுக்குப் பதிலாக எரிக்கப்படாத வீடுகளைக் கட்டித் தந்தோம். அவர்களுக்கு அதே தொகையை ஒதுக்கித் தான் அந்த வீடுகளைக் கட்டித் தந்தோம். இரண்டுக்கும் ஒரே செலவுதான் ஆகிறது. இதை அரசு பரிசீலனை செய்யும்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, மத்திய அரசு அரிசனநல முன்னேற்றத்திற்கு வீடு கட்டுவதற்கு தனியாக ஏதாவது மானியம் தருகிறதா ? அல்லது மாநில அரசே பொறுப்பேற்று செயல்படுகிறதா ? மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்திடமிருந்து தனியாக உதவி கேட்டுப்பெற முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் மாநிலத்திற்கு நிதி ஒதுக்கீடு மொத்தமாகத் தருகிறது. ஆனால் திட்டங்களை அவற்றின் ஒப்புதலைப் பெற்றுத் தான் செய்ய வேண்டுமென்றும், அவர்களைக் கேட்டுக் கொண்டு தான் செய்ய வேண்டுமென்றும் சொல்கிறார்கள். அதற்காகத் தான் நாம் மாநில சுயாட்சி வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, அரிசனங்களுக்குக் கொடுக்கப்படும் கடனில் பெரும் பகுதி திரும்பி வருவதில்லையென்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தக் கடனைத் திருப்பிக் கொடுக்கும் சக்தி அவர்களுக்குக் குறைவாக இருக்கிறது. ஆகவே, அவர்களுக்குக் கொடுக்கப்படும் மானியத் தொகையை அதிகமாக்கிக் கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, மனம் இருக்கிறது எங்களுக்கு, ஆனால் மார்க்கம்தான் இல்லை. மார்க்கம் கிடைக்கிற போது அதைப் பற்றி யோசிக்கலாம்.

திரு. இராம. அரங்கண்ணல் : தலைவர் அவர்களே, நலத்துறையின் மூலமாக 940 ரூபாய் செலவில் வீடுகள் கட்டிக் கொடுப்பது கிராமங்களில் உள்ளவர்களுக்கு மட்டும் தானா ? சென்னை நகருக்கும் அது பொருந்துமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, சென்னையில் குடிசை மாற்று வாரியம் இருக்கிறது. அந்த வாரியத்தின் தலைவரே கேள்வி கேட்கிருர். அவரே குடிசை மாற்று வாரியத்தின் மூலம் கட்டித் தரட்டும்.

*2 வினு—**திரு. நா. வீராசாமி :** மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தாழ்த்தப்பட்டவர்களுக்கு கிராமப் பகுதிகளில் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டமேதாவது அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஆம்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, கிராமப் பகுதிகளில் அரிசனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கிருர்கள் என்று சொன்னுர்கள். போதுமான அளவுக்கு வீடுகள் கட்ட முடியவில்லை. மத்திய அரசாங்கம் கொடுத்த உதவி நிறுத்தப்பட்டிருப்பதாகச் சொன்னுர்கள். இந்த அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு லட்சக்கணக்கான ஏழைகளுக்கு, அரிசனங்களுக்கு பட்டாக்கள் வழங்கியிருக்கிறது. அரிசனங்களுக்கு இனி பட்டாக்களாக வழங்காமல், மத்திய அரசாங்கத்திடம் அல்லது எல். ஐ. சி. மூலமாக கடன் பெற்று, வீடுகளைக் கட்டிக் கொடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, வீடுகளைக் கட்டிக்கொள்ளக்கூடியவர்கள் கட்டிக் கொள்ளுகிருர்கள். கடனைத் திருப்பிக் கட்ட முடியாதவர்களால் எப்படி வீடுகளைக் கட்டிக் கொள்ள முடியும் அப்படிப்பட்டவர்களுக்காக அரசு வீடுகளை கட்டிக் கொடுப்பதற்காக வேண்டிய நிதி வசதி வேண்டும். எல்.ஐ.சி. மூலமாக அல்லது தேசிய மயமாக்கப்பட்ட பாங்குகளின் மூலமாக கடன் தரும்படிக் கேட்டிருக்கிறேம். மத்திய அரசு ஒத்துக் கொண்டு அனுமதித்த பிறகு தான் அதைப்பற்றி யோசிக்க முடியும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, நலத்துறையின் மூலமாக பல வீடுகள் கட்டிக் கொடுப்பதாகச் சொன்னுர்கள். நான் கேட்க விரும்புவது என்னவென்றல், அந்தப் பகுதிகளில் எல்லாம் அரசே நல்லபடியாக வீடுகளைக் கட்டிக் கொடுத்து, அவர்களிடத்திலே வாடகை மாதிரி வசூலித்துக் கொள்ளும் ஏற்பாடு ஏதாவது இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, நலத்துறையின் மூலமாக வாடகைக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் இப்போது இல்லை. வாடகை பாக்கி சிறிது சிறிதாகச் சேர்ந்து பிறகு அவர்கள் திருப்பிக் கட்ட முடியாத நிலைமை ஏற்பட்டுவிடுகிறது. அவர்களிடமிருந்து அதிகாரிகளாலும் சரியாக வாடகை வசூல் செய்ய முடிவதில்லை. அதனுல் பல சிக்கல்கள் எழுகின்றன. வாடகைக்காக வீடு கட்டும் திட்டம் இப்போது இல்லை. பொதுவாக அரிசன மக்களும் இப்படிப் பட்ட வீடுகளை விரும்பவில்லை.

திரு. க. மு. இராசகோபால் : தலைவரவர்களே, நாட்டுப் புறங்களில் அரிசன மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுவதாகவும், ஆகவே அதைப் போல் நகர்ப் புறங்களில் அதாவது சென்னை போன்ற இடங்களில் அப்படித் தேவை என்று கேட்கிருர்கள். ஆனுல் கட்டப்பட்டிருக்கும் வீடுகளுக்கு மானியம் கொடுக்கப்படவில்லை. திருப்பிக் கட்டப்படவில்லை என்று சொல்கிருர்கள். அதற்குக் காரணம் கட்டப்பட்ட வீடுகள் இடிந்து விழுவதால் அந்த மக்கள் கட்டவில்லை. அதிலும், ஊரிலே ஐந்தாறு வீடுகள் தான் கட்டப்படுகின்றன. ஒரு காலனியில் 5 பேர்களுக்குக் கொடுத்து விட்டு மீதியுள்ள நூற்றுக்கணக்கானவர்களுக்குக் கிடைக்காமற் போவதால், தகராறுகள் ஏற்படுவதற்கு வழியேற்படுகிறது. எனவே, ஒரு காலனியை எடுத்துக் கொண்டால், சென்னையில் கட்டுவது மாதிரி கட்டிக் கொடுக்க அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.